
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1006

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

134

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **என். வி. என். சோமு** அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# என்.வி.என்.சோமு; ‘பத்தரை மாற்று தங்கக் கட்டி!’

“திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்துள்ளது. சுழன்றடித்த சூறாவளிகள், குலுங்கவைத்த பூகம்பங்கள் எல்லாம் இந்த இயக்கத்துக்கு வந்தபோதும்கூட, அத்தனையும் சமாளித்து இன்றைக்கு நிமிர்ந்து நடைபோடுகிறது என்றால், அதற்குக் காரணமாக அமைந்தவர்கள், இந்த இயக்கத்திலேயே இருந்த, இருக்கின்ற தூய உள்ளம் படைத்த தொண்டர்கள். குறிப்பாக, சோமுவைப் போன்றவர்கள் இந்த இயக்கத்திலே இருக்கின்ற காரணத்தால்தான் - அவருடைய தந்தையார் என்.வி.நடராசன் அவர்களைப் போன்றவர்கள் இருந்த காரணத்தினால்தான்” என முத்தமிழறிஞர் கலைஞர் 1997 -ஆம் ஆண்டில், இன்றைய கழக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி அவர்களின் மணவிழாவின்போது, அவரது தந்தையார் சோமு அவர்கள் குறித்து பெருமையுடன் பேசினார்.

கழகத்தின் முன்னோடி என்.வி.நடராசன் தனது குடும்பத்தினருக்குக் கொடுத்த கொள்கைப் பற்றுறுதியில், அவரது மகனாகத் தனது வாழ்வை கழகத்துக்கு, கலைஞருக்கு என அர்ப்பணித்துக்கொண்ட உடன்பிறப்பு என்.வி.என்.சோமு. “அவர் எனக்கு விசுவாசமாக இருப்பது மாத்திரமல்ல, இந்தக் கட்சிக்கு விசுவாசமானவர், கொள்கைக்கு விசுவாசமானவர்” என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அளித்த நற்சான்று.

சென்னை செங்குன்றம் அருகில் உள்ள ஞாயிறு என்கிற ஊர்தான், கழக முன்னோடி என்.வி.நடராசன் அவர்களின் சொந்த ஊர். என்.வி.என். அவர்கள், சென்னைக்குக் குடிபெயரும் முன்பே 1937-ஆம் ஆண்டு பிறந்தவர் சோமு. அதன்பின்னர், சென்னையில் வளர்ந்தவர். சோமு, கைக்குழந்தையாக இருக்கும்போதே, தனது தாயார் புவனேஸ்வரியுடன் சிறை சென்றவர். 1938 -ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் ஆகியோருடன் கைது செய்யப்பட்டபோது, ஆறுமாத கைக்குழந்தையான சோமுவையும் தூக்கிக்கொண்டு சிறை சென்றவர், புவனேஸ்வரி அம்மையார்.

### கழகத்தின் சட்டப்பணி

தொடக்கக் கல்விக்குப் பின்னர், சர்.பிட்டி தியாகராயர் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, பின்னர் சட்டப்படிப்பு பயின்றவர். படித்து முடித்து வந்தவருக்குத் தயாராக இருந்தது இந்தியன் வங்கி வேலை வாய்ப்பு. உறவினர்கள் உத்தரவாதமான வேலையைத் தேர்வு செய்யச் சொல்ல, சோமு, தனது தந்தையிடம் கேட்ட யோசனையைவிட, பேரறிஞர் அண்ணாவிடமே அந்த ‘அப்பாயின்மென்ட்’ கடிதத்தைக் கொண்டு வந்து காட்டுகிறார். அதைப் பார்த்த அண்ணா, “கட்சியில் சட்டப் பணிகள் ஏராளம் இருக்கின்றன. உன்னைப் போன்றோர்தான் கழகத்தின் வழக்குகள், சட்டப்பணிகளைக் கவனிக்க வேண்டும்” என சோமு அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் பேசி, முழுநேர கட்சிப் பணிக்கு அழைத்துக் கொண்டார். அப்படித்தான் கழகத்தின் முதல் சட்டக்குழுவில் இணைந்து கொண்டார் என்.வி.என்.சோமு. ஆனால், அதற்கு முன்பிருந்தே அரசியல் குடும்பச் சூழலில் வளர்ந்தவர். குடும்பத்தின் அனைவரும் கொள்கை வழி பயணிப்பவர்கள் என்பதால், சோமு அவர்களும் இயல்பிலேயே கொள்கைப் பற்றாளராக இருந்ததுடன், கழக மாணவர் அணியிலும் இணைந்து செயல்பட்டவர். 1965 ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றவர்.

### படிப்படியான வளர்ச்சி

1966-ஆம் ஆண்டு, சோமு அவர்களின் திருமணம், பேரறிஞர் அண்ணா தலைமையில் அனைத்துக் கட்சி நிகழ்ச்சி போல நடைபெற்றுள்ளது. கழகத்தின் அனைத்து முன்னோடிகளும், பெருந்தலைவர் காமராஜர், அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். தந்தை என்.வி.என்., கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தாலும் சோமு அவர்கள், படிப்படியாகத் தனது அரசியல் அனுபவத்தின் வழியாகவே கழகத்தில் வளர்ந்தவர்.

1968 ஆம் ஆண்டு, சென்னை பெத்தநாயக்கன் பேட்டை மாநகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1973ஆம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் இருந்தார். 1971-72ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியின் துணை மேயராகவும் பொறுப்பேற்றிருந்தார். 1980 ஆம் ஆண்டு, பூங்கா நகர் தொகுதியிலிருந்து தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 84ஆம் ஆண்டு வரை சிறப்பாகப் பணியாற்றியவர்.




> “கழகப் பணிகளில் காட்டிய தீவிரம் போலவே, சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் திகழ்ந்தவர் சோமு.”

1984ஆம் ஆண்டு சட்டமன்றத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்திரா காந்தி மறைந்து, எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நேரம். அந்தத் தேர்தலில் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட என்.வி.என். சோமு மட்டுமே கழகத்தின் சார்பில் வெற்றி பெற்றார்.

1996ஆம் ஆண்டு, சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, இரண்டாம் முறையாக வெற்றிபெற்று வந்தவருக்கு, ஒன்றிய அமைச்சராகும் வாய்ப்பினை உருவாக்கினார், கலைஞர். அப்போது, கழகத்தின் ஆதரவுடன் அமைந்திருந்த தேவகவுடா அமைச்சரவையிலும், அதன்பின்னர் ஐ.கே.குஜ்ரால் அமைச்சரவையிலும் பாதுகாப்புத் துறை இணை - அமைச்சராகப் பதவியில் இருந்தார்.

### தொழிற்சங்கவாதி

கழகப் பணிகளில் காட்டிய தீவிரம் போலவே, சிறந்த தொழிற் சங்கவாதியாகவும் திகழ்ந்தவர் சோமு. ‘இந்து’ நாளேட்டின் தொழிற் சங்கத் தலைவராக 1967ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பொறுப்பு வகித்த பெருமை கொண்டவர். இந்தியன் எக்ஸ்பிரஸ், அசோக் லேலண்ட், எம்.ஆர்.எப்., சிம்சன் உள்ளிட்ட முக்கிய தொழில் நிறுவனங்களின் தொழிற் சங்கங்களிலும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

சோமு அவர்களின் கழக வரலாற்றில், குறிப்பிடத்தக்க நிகழ்வு, அவர் ‘கழகக் கொடிகாத்த குமரன்’. 1993 ஆம் ஆண்டுவாக்கில் கழகம் உள்கட்சி நெருக்கடியை சந்தித்தபோது, கழகத்தின் கொடி தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றம் சென்றது. கொடியை மீட்பதற்குச் சென்ற வழக்கறிஞர் அணியில் சோமு, அந்த மகத்தான வெற்றியை கலைஞருக்கு அறிவித்தார். ‘கழகத்துக்கும், கலைஞருக்கும் எந்தக் காலத்திலும் துரோகம் செய்யக் கூடாது’ என தந்தையார் என்.வி.என். தனது இறுதி நாட்களில் பெற்ற சத்தியத்தை மீறாத சோமு, அதை உறுதியாகப் பற்றி நின்றது மட்டுமல்ல; கழகத்துக்கும் கலைஞருக்கும் அப்படியான சூழ்நிலை வந்தபோது அரணாகவும் நின்றார். தன் அப்பாவுக்குக் கொடுத்த சத்தியத்தைப் பல மேடைகளில் பகிர்ந்துள்ளார், சோமு. கொடி காத்த வரலாற்றில் சோமுவின் பங்கினைப் பகிர்ந்துள்ளார், கலைஞர்.

இப்படி கழகம் வளர்க்க அரும்பாடுபட்ட கழக முன்னோடியின் புதல்வர் - கலைஞரின் தொண்டர் ஒன்றிய இணை அமைச்சராக இருந்தபோது, 1997 ஆம் ஆண்டில் நவம்பர் 14ஆம் தேதி, எதிர்பாராத வகையில், அருணாசலப் பிரதேசத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் பலியானார். அந்தச் செய்தியை அறிந்த கணத்தில் “அடக்கமே உருவான என் அன்பு, ஆருயிர் தம்பியை, அறிவும் ஆற்றலும் பெற்ற தம்பியைப் பறிகொடுத்து, நெஞ்சுடைத்துப் பதறும் என்னை யார்தான் தேற்றிட இயலும். இந்த கொடுமைகளையெல்லாம் காணவும் கேட்கவும்தான் நான் இன்னமும் இருக்கிறேனா” என கலைஞர் வடித்த கண்ணீர், கழகத்தின் அத்தனை உடன்பிறப்புகளுக்கும் ஆறாத வடுவைக் கடத்தியது. ‘பத்தரை மாற்று தங்கக் கட்டி பறிபோய்விட்டது’ என கடிதம் எழுதிய கலைஞர், அவர் விட்டுச் சென்றுள்ள பணிகளை அண்ணா வழியிலே அயராதுழைத்து நிறைவேற்றிட உறுதி பூணுவோம் என உடன்பிறப்புகளுக்கு உணர்வூட்டினார். கலைஞரின் எழுத்தும், என்.வி.என்.சோமுவின் வாழ்வும் கழகத்தினர் நினைவில் என்றும் நிற்கும்.

...துடிக்கும்

## அகஸ்தியர் எனும் புரளி!




தொல்லியல், வரலாற்றுச் சான்றுகள் என எதுவும் இல்லாமல், தமிழ் தொன்ம மரபுகளில் திணிக்கப்பட்டவர் அகஸ்தியர். கற்பனை, புராணம், வழிபாட்டு நம்பிக்கைகள், புரளி ஆகியவற்றில் இருந்து கட்டமைக்கப்பட்ட ஆரிய அகஸ்தியருக்கு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், ‘அகஸ்தியர் வாரம்’ என நிகழ்ச்சி நடத்திக்கொண்டாடியது. தமிழ்நாட்டின் மரபுகளுக்கு எதிரானவராகவே கட்டமைக்கப்பட்ட அந்த ‘அகஸ்தியர்’ குறித்த மாயைகளை விவரிக்கும் வகையில், மூ. அப்பணசாமி எழுதிய, ‘அகஸ்தியர் எனும் புரளி’ நூலை உயிர் பதிப்பகம், இன்று (01.11.2025 சனிக்கிழமை) வெளியிடுகிறது.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்த உள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் நூலைப் பெற்றுக்கொண்டு உரையாற்ற உள்ளார். நிகழ்ச்சியில் பேராசிரியர் வீ.அரசு, தொல்லியலாளர் மார்க்சிய காந்தி, எழுத்தாளர் சுகுணா திவாகர், திரைப்பட இயக்குநர் லெனின் பாரதி, இயக்குநர் திருக்குமரன் ஆகியோர் உரையாற்ற உள்ளனர். சென்னை கோட்டூர்புரம் தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் மாலை 5.30 மணிக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஆரியக் கட்டுக்கதைகளை அகஸ்தியர் வழி பரப்புவதற்கு எதிராக, தமிழ் பண்பாட்டு மரபு சான்றாதாரங்களுடன் எதிர்கொள்ள ஒரு நூல் - வாய்ப்புள்ளோரை வரவேற்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



## பல்லாவரத்தில் முத்தமிழறிஞர் எழுச்சியுரை!



எஸ்.சாகுல் அமீது

என் தாத்தா பி.மொ.சாகுல் அமீது அவர்கள் கழக மாவட்டப் பிரதிநிதியாக இருந்தவர். பல்லாவரம் நகராட்சியாக இருந்தபோது 25-வது வட்டச் செயலாளராக கழகப் பணியாற்றினார். இந்தப் படம் 1974-ஆம் ஆண்டு என்னுடைய தாத்தா அவர்கள் தலைமையில் குரோம்பேட்டை அனுமார் கோவில் அருகில் நடைபெற்ற பொதுக்கூட்டம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுச்சியுரை ஆற்றினார் என்று என் தாத்தா கூற நான் கேட்டிருக்கிறேன். அவர் வழியில் என் கழகப் பணி என்றும் தொடரும்.

- எஸ்.சாகுல் அமீது
பகுதி இளைஞரணி அமைப்பாளர்
பல்லாவரம் தெற்கு, தாம்பரம் மாநகரம்

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அதிகாரபூர்வ போட்டி!

1958 மார்ச் 01-ஆம் தேதி, கழகத்தின் அதிகாரபூர்வச் சின்னமாக உதயசூரியன் அறிவிக்கப்பட்டது. அடுத்த 35 நாட்களில், 05.04.1958 அன்று, தேவகோட்டையில் நடைபெற்ற இடைத்தேர்தலில், உதயசூரியன் சின்னத்தில் அதிகாரபூர்வமாகப் போட்டியிட்டது கழகம்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.